இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி


Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 38 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 31 – திங்கள்கிழமை 16 செப்டம்பர் 2024 – கோவை ★★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 38: Thiruvalluvar Year - 2055 - Aavani 31 - Monday 16 September 2024 - Kovai ★★ 12 Pages ₹ 5.00





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.9.2024) பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, அண்ணா சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், தலைமைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### பேரறிஞர் அண்ணா 116வது பிறந்த நாள்: சென்னை, வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே உள்ள

# பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை!

## கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் – அமைச்சர்கள் – கழகத்தினர் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்!

**சென்னை, செப். 16 -**

**பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 116வது ஆண்டு பிறந்த நாளான நேற்று (15.9.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணி அளவில் சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் கழகப் பொதுச் செயலாளர் துரை முருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.**

இதில் அமைச்சர் பெருமக்கள், முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக் குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக் குழு, மகளிர் தொண்டர் அணி, கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை, மருத்துவ அணி, பொறியாளர் அணி, சிறுபான்மை யினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தக அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.9.2024) பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில், நீர்வளத்துறை அமைச்சரும், கழகப் பொதுச் செயலாளருமான துரைமுருகன், மக்களவை கழகக் குழுத் தலைவரும், கழகப் பொருளாளருமான டி.ஆர்.பாலு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### சமத்துவ – சகோதரத்துவத்தின் வெளிப்பாடாகத் திகழும்

# ஓணம் திருநாளைக் கொண்டாடும் மலையாள உடன்பிறப்புகளுக்கு வாழ்த்துகள்!

**சென்னை, செப். 16-**

**“சமத்துவ, சகோதரத்துவத்தின் வெளிப்பாடாகத் திகழும் ஓணம் திருநாளைக் கொண்டாடும் மலையாள உடன்பிறப்புகள் அனைவருக்கம் வாழ்த்துகள்” முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஓணம் திருநாளையொட்டி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

கேரள மக்களின் பண்பாட்டுப் பெருவிழாவான ஓணம் திருநாள் உலகெங்கிலும் வாழும் மலையாளிகளால் எழுச்சியுடன் நேற்று (15.9.2024) கொண்டாடப்பட்டது.

அத்தப்பூக்கோலம், அறுசுவை சத்ய விருந்து, பல்வேறு கலை நிகழ்ச்சிகள், போட்டிகள் என மக்கள் அனைவரும் ஒன்றுகூடி மகிழும் நாளாகத் திருவோணம் அமைந்துள்ளது.

நல்லாட்சி புரிந்த மன்னனை நேருக்கு நேர் எதிர்கொள்ள முடியாமல் சூழ்ச்சியாலும் வஞ்சகத்தாலும் வீழ்த்தினாலும், அவனை மக்கள் மனங்களில் இருந்து அகற்ற முடியாது என்பதை உணர்த்தும் கொண்டாட்ட மாகவே ஓணத்தைக் காணவேண்டும்.

**கேரள மக்களுக்கு உதவிக்கரம் நீட்டும் தமிழ்நாடு!**

திராவிட உடன்பிறப்புகளான கேரள மக்களுக்கு ஓர் இடர் என்றால் உடனடியாக உதவிக்கரம் நீட்டத் தமிழ்நாடு என்றுமே சகோதர உணர்வோடு முன்னிற்கும். அந்த வகையில் தான், அண்மையில் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவின்போது தமிழ்நாடு அரசின் சார்பில் 5 கோடி ரூபாய் நிதியுதவி அளித்ததோடு, மீட்பு, மருத்துவக் குழுக்களையும் அனுப்பி வைத்தோம். பெருமழை விளைவித்த பாதிப்புகளில் இருந்து மலையாளிகளுக்கே உரிய போராட்டக் குணத்துடன் மீண்டு வரும் கேரள மக்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிப்பதாக இந்த ஓண நன்னாள் அமையும் என்று நம்புகிறேன்.

சமத்துவம், சகோதரத்துவத்தின் வெளிப்பாடாக ஓணத் திருநாளைக் கொண்டாடும் எனது அன்பிற்கினிய மலையாள உடன்பிறப்புகள் அனைவருக்கும் உங்கள் சகோதரன் ஸ்டாலினின் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச்செய்தியில் கூறியுள்ளார்.